புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
Peer-Reviewed
ISSN : 2456-821X
UGC CARE LIST
UGC Care Listed Journal (2023 onwards)
Sacred Heart Research Publication, Sacred Heart College, Tirupattur-635601, Tamilnadu, India
Volume : 07, Issue : 01/04 - March 2023

=====================================================================

# மாணிக்கவாசகரின் பாவை, பள்ளியெழுச்சி – தோற்றமும் வளர்ச்சியும்

=====================================================================

**ஆய்வாளர்**
***க.விஜயலெட்சுமி***
*முனைவர் பட்டஆய்வாளர்,*
***Reg: BDU20106 30351 /Ph.D/19/024/***
***Tamil/Full Time/Feb2020)***
*தமிழாய்வுத்துறை,*
*தேசியக்கல்லூரி (தன்னாட்சி)*
*பாரதிதாசன் பல்கலைகழக இணைவு பெற்றது*
*திருச்சிராப்பள்ளி - 620 001.*

**நெறியாளர்**
***முனைவர் க.புவனேஸ்வரி,***
*உதவிப்பேராசிரியர்,*
*தமிழாய்வுத்துறை,*
*தேசியக்கல்லூரி (தன்னாட்சி)*
*பாரதிதாசன் பல்கலைகழக இணைவு பெற்றது*
*திருச்சிராப்பள்ளி -620 001.*

=====================================================================

***ஆய்வுச்சுருக்கம்:***

*பெருமை போற்றும் இந்த மண்ணுலகில் சைவராக வாழும் அனைவரும் அறிந்து வைத்துள்ள ஒரே பெயர் தெரிந்து கொள்ள வேண்டிய ஒரே பெயர் என்றைக்கும் மறக்காமல் வைத்துள்ள ஒரே பெயர் மாணிக்கவாசகரின் திருபெயராகும். அவரை சைவசமயக் குரவளுள் ஒருவராக மாணிக்கவாசகர் போற்றப்படுகிறார். இந்த உலகமே உய்யும் பொருட்டு திருவாகம் எனும் தேன் அமுதை அவர் நமக்கு தந்தருளினார். வள்ளலார் கூறியிருப்பது என்னவென்றால் ஒவ்வொரு நூறு ஆண்டுகளுக்கு ஒருமுறை ஒரு மகான்கள் தோன்றுவது உண்டு அப்படி தோன்றி பன்னிருதிருமுறைகளிலே எட்டாம் திருமுறையாகத் திகழ்வது திருவாசகம். இந்நூல் மார்கழி மாதத்தில் பாவை நோன்பு மூலம் வைகறை வழிபாட்டின் சிறப்பை இந்நூல் எடுத்தாளுகிறது. பாவை விளையாட்டு,*

*மார்கழி மாதம் சிறப்பு, பாவை நோன்பு, தைப்பாவை அதுமட்டுமல்லாமல் மற்றப் பாவைகளின் ஒப்பீடு இப்படி இதற்கு காரணமாக இருந்த மாணிக்கவாசகரின் திருவெம்பாவை சிறப்பு பற்றி எடுத்துக் கூறப்பட்டுள்ளது. மேலும் மாணிக்கவாசகரின் பாவை, பள்ளியெழுச்சியும் தோற்றம் வளர்ச்சியும் வரிவாக இக்கட்டுரையில் காணலாம்.*

***முன்னுரை:***

*மாணிக்கவாசகர் அருளிய திருவாசகம் சைவ சமய உலகில் தனிப்பெரிய இடம் கொண்ட இலக்கியங்களாகும். சைவ சமய உலகில் மார்கழித் திங்களில் வைகறை வழிபாட்டின் சிறப்பை இந்நூல் எடுத்தாளுகிறது. சைவமும் தமிழும் தழைக்கும் இடமாகத் துவங்குவது திருவெம்பாவை என்றேக் கூறலாம். மாணிக்கவாசகர் பாடிச் சென்று பல நூற்றாண்டுகள் கழிந்துவிட்ட நிலையிலும், இன்றும் சைவ உலகிலும் இலக்கிய உலகிலும் இந்த பாடலுக்கு நெஞ்சம் பறிகொடுத்தவர் பலரும் உண்டு என்றே கூறலாம்.*

***பாவை:***

*பாவை என்னும் சொல் சங்க இலக்கியங்களில் இடம் பெற்றுள்ளது. பாவை என்பதற்கு பதுமை, அழகிய உருவம், கருவிழி, பெண், குரவமலர், ஒருவகை மீன், மதில் போன்ற பல பெயர்கள் உண்டு. இருந்தாலும் பாவை அழகிய உருவம் என்ற பொருளில் மிகுதியாக வழங்கப்பட்டு வந்துள்ளது.*

***பாவை விளையாட்டு***

*இளமகளிர் அழகிய பாவைகளை வைத்து விளையாடினர் எனவும், அவர்கள் வீட்டு எல்லைக்குள் மணால்; பாவை செய்து பூச்சூட்டி விளையாடினர் எனவும் மணற்பாங்கான இடத்தில் நீர்நிலைகளின் அருகிலும் விளையாடினர் என்று சங்கப் பாடல்கள் எடுத்துக் கூறுகின்றன.*

***"பந்து நிலத்தெறிந்த பாவை நீக்கி"[1]***

***(நற்றி -179)***

***"பந்தும் பாவையும் கழங்கும் எமக்கொழித்தே"[2]***

***(ஐங்குறு -37)***

மேலே குறிப்பிடும் மகளிர் விளையாடும் பிற விளையாட்டுகளுடன் பாவையும் சேர்த்துக் கூறுவதிலிருந்து தமிழ் மக்கள் விளையாட்டுகளுள் பாவை விளையாட்டும் தனிச் சிறப்பிடம் பெற்று விளங்குகிறது என்பது இதன் வாயிலாக தெரிகிறது.

*பாவையாரின் பாவை விளையாட்டில் இயல்பாக எழுந்த,*

***" ஆத்து மணலிலே உன்னைப்பெற்றா***

***அருந்தவச் செய்யலிலே***
***ஆத்து மணல் குவித்து அருந்தவசு செய்யலிலே***
***பார்த்திருந்து பரமசிவன் பாலகனைத் தந்தாரோ?"[3]***

*போன்ற நாட்டுப்புற பாடல்களே பிற்காலத்தில் பாவைப் பாடல்கள் தோன்றக் காரணமாய் அமைந்துள்ளன என்றேக் கூறலாம்.*

***மார்கழி மாதம் சிறப்பு:***

*மற்ற மாதங்களுக்கும் காலை நீராடல் பொருந்தும் என்றாலும், பனியாலும் குளிராலும் நடுங்கிப்; போர்வையை இழுத்துப் போர்த்திக் கொண்டு உறங்கத் தூண்டும் காலம் தான் மார்கழி மாதம் உறக்கத்தை உதறித் தள்ளி, நடுக்கத்தை விடுத்து, பனியைப் பொருட்படுத்தாமல் நீராட அழைக்க மார்கழியை மாதம் எடுத்து குறிப்பிட்டு இருக்கின்றன. பனியின் தொடக்க காலம் மார்கழி மாதம் ஆகையால் மார்கழி நீரின் சிறப்பித்துச் சொல்லப்பட்டு இருக்கிறது.*

*மார்கழித் திங்களைச் சிறப்பித்துப் பேசும் வழக்கத்தை வடமொழி நூல்களிலும் குறிப்பிடுவரை காண முடியும். 'மாதங்களில் நான் மார்கழி ஆகின்றேன்' என்று கண்ணன் கீதையில் பேசுகிறான்.*

***பாவை நோன்பு:***

*பண்டைக் காலத்தில் மணமாகாத கன்னிப்பெண்கள் பாவை நோன்பு என்று ஒரு நோன்பு நோற்று வந்தனர். அந்த நோன்பிற்கு இந்தப் பாவைப் பாடல்கள் துணையாக இருந்தன. சைவ சமயத்தில் இந்த நோன்பு மார்கழித் திங்களில் திருவாதிரைக்குப் பத்து நாள்களுக்கு முன் தொடங்கித் திருவாதிரையன்று முடிவு பெறும் என புராணச்செய்திகள் குறிப்பிடுகின்றன.*

*மாணிக்கவாசகர் காலத்துக்கு முன்பே மார்கழித் திங்கள் திருவாதிரையை ஒட்டித் தவத்தை நீராடல் நிகழ்ந்தமை காண முடியும். எனவே, அதனையே கருவியாகக் கொண்டு தம் இறையனுபவத்;தைப் பாவை மொழியில் மாணிக்கவாசகர் திருவெம்பாவையாக இயற்றினார் எனக் கூறலாம்.*

***வேண்டுகோள்:***

*இளம் கன்னி மகளிர் நீராடி நோன்பு நோற்பதற்கான நோக்கம். நாட்டில் நல்ல மழை பெய்து, நோயும் துன்பமும் நீங்கி, இவ்வுலகம் இன்புறுதல் வேண்டுமென இறைவனை வேண்டி அவனது திருவருளைப் பெறுவதே அந்நோன்பின்; நோக்கம் என்றேக் கூறலாம்.*

*திருவெம்பாவை பாடல் பகுதியில் மகளிர் அம்மையின் அருளே போல் மழைபெய்ய வேண்டுவதோடு, சிவனடியார்களையே தமக்குக் கணவனாக வாய்க்குபடியும் வேண்டுகின்றனர். திருப்பாவையில் நாரயணனின் வில்லினின்று விடுபடும் சரம்போல மழைபொழிக என வேண்டுவதுடன், கண்ணனையே தமக்குக் கணவனாக வாய்க்கவும் வேண்டுகின்றனர்.*

***" கோழியுங் கூவின ; குக்கில் அழைத்த ;***
***தாழியுள் நீலத் தடங்கணீர் போதுமினோ***
***ஆழிசூழ் வையத் தறிவன் அடியேத்திக்***
***கூழை நனைய குடைந்தும்; குளிர்புனல்***
***ஊழியும் மன்னுவாம் என்றே லோர் எம்பாலாய்"[4]***

***(பாப்பருங்கலவிருத்தி -93 சூத்திரம்)***

*மேலே குறிப்பிட்ட செய்யுள் ஒன்று உதாரணமாகக் காணப்பட்டுள்ளதால் திருவெம்பாவை, திருப்பாவை போன்ற வேறு சில பிரபந்தங்கள் இருந்தனவோ என எண்ண முடிகிறது.*

*மாணிக்கவாசகர் அருளிய திருவெம்பாவையில் ஒன்று முதல் எட்டுத் திருப்பாடல்களில் கன்னி கழியா சிறு மகளிர் ஒருவரை ஒருவர் எழுப்பும் நிலையில் அமைந்துள்ளன. இம்மகளிர் எண்மரும் எழுப்புபவளுமான ஒருத்தியுமாக ஒன்பதின்மர் தம்முள் உரையாடும் நிலையில் அமைந்துள்ளது.*

*தமிழ் மாதங்களில் மார்கழி சிறப்புடையது. தமிழுக்கே உரிய சிறப்பு 'ழ'கரம் இத்திங்களிலேயே அமைந்துள்ளது. எழுத்துக்களில் நான் அகரமாய் உள்ளேன்; மாதங்களில் மார்கழியாய் உள்ளேன் என்றருளினார் கண்ணபிரான்.*

*நாடு வளங்குகின்ற மழை பொய்த்து நிலை தடுமாறுங்காலம் வராமைக்கும், இம்மை மறுமை நலன் எய்திடவும் வேண்டி கார்த்தியாயினி தேவியைக் குறித்து மார்கழிமாதம் முழுவதும் நோன்பு நோற்பர். அத்திங்கள் வைகறை எழுந்து ஒருவரை ஒருவர் துயிலெழுப்பி நீர் நிலையடைந்து நீராடி தேவியின் வடிவொன்றினைச் செய்து தத்தம் மனத்தில் நினைத்து நிறைவே பூசிப்பர். நெய்யுண்ணாது, பால் குடியாது, நாட்காலை நீராடி, கண்களில் மையிட்டு எழுதாது, மலரிட்டு முடியாது, செய்யாதனசெய்யாது, தீக்குறளைச் சென்றோதாது ஆதிரை நன்னாள் வரை கன்னி கழியாதார் நோன்பு மேற்கொள்வர்.*

**"ஆதியும் அந்தமும் இல்லா அருட்பெரும்**
**சோதியை யாம்பாடக் கேட்டேயும் வாள் தடங்கண்**

***மாதே! வளருதியோ? வன்செவியோ நின்செவிதான்?***
***மாதேவன் வார் கழல்கள் வாழ்ததிய வாழத்தொலிபோய்***
***வீதிவாய்க் கேட்டலுமே விம்மி விம்மி மெய்மறந்து***
***போது ஆர் அமளினின்மேல் நின்றும் புரண்டிங்ஙன்***
***ஏதேனும் ஆகாள் கிடந்தாள் என்னே! என்னே!***
***ஈதே எம்தோழி பரிசு ஏல் ஓர் எம்பாவாய்!"[5]***

***(திருவெம்பாவை -155)***

*மேலே குறிப்பிட்ட பாடலில் உறங்கிக் கொண்டிருக்கும் தோழியை எழுப்பி அழைத்துச் செல்லும் நிலையில் இப்பாடல் அமைந்துள்ளது.*

*ஒளி பொருந்திய நீண்ட குளிர்ச்சியான கண்களையுடைய பெண்ணே! ஆதியும் அந்தமும் இல்லாத அருட்பெருஞ்சோதியை யாம் பாடக் கேட்டேயும் உறங்குகின்றனையே? நின் செவிதான் வன்மை கொண்டதோ? (மற்றவன்) மகாதேவனுடைய நெடிய சிலம் பணிந்த திருவடிகளை நாங்கள் புகழ்ந்து பாடிய பாடல்களின் ஒலியானது தெருவில் கேட்டபோதே நம் தோழியருள் ஒருத்தி அழுது மெய்மறந்து மலர்கள் நிறைந்துள்ள அப்படுக்கையினின்றும் புரண்டு வீழ்ந்து இந்நிலத்தில் ஒன்றுக்கும் உதவாதவள் போல் மூர்ச்சித்து கிடந்தாள். இஃது அவளின் தன்னை என்ன வியப்பு மாணிக்கவாசகர் பாடலின் சிறப்புத்தன்மை புலப்படுத்துகிறார்.*

***மார்கழி மாதத்தின் புனிதத்தன்மை:***

*மார்கழி மாதமானது பன்னிரு மாதங்களில் சிறந்தது. கீதையில் கண்ணன் 'நான் மாதங்களில்' (10:35) எனக்கூறுவது இதற்குச் சான்றாகும். இந்த நன்னாளில் ஆண்டாள் காத்தியாயனி வழிபாடு புரிவதற்கும், நோன்பு நோற்பதற்கு தொடக்கமாகத் தோழியரை, '**நீராடப் போதுமீர்**' என்று அழைக்கிறான்.*

***" மார்கழித் திங்கள் மதி நிறைந்த நன்னாளால்***
***நீராடப் போதுவீர்"[6].***

***(திருப்பாவை -1)***

*என்று தொடங்குகிறது.*

*ஆண்டாள் பாவை நோன்பு நோற்பதற்காகத் தன் தோழியரை நீராட வரும்படி வீதி வழியே சென்று அழைக்கிறான். அப்போது அவள் பாவைத் தெயவத்தின் புகழைப் பாடிச் செல்கிறாள். துயிலெழுந்து வந்து தன்னோடு கூடிய தோழியருடன் உறங்குகிற மற்ற தோழியரை உணர்த்துதற்காக அவர்கள் முற்றத்தில் இருந்து எழுப்பும் போதும் திருமால் எடுத்த அவதார நிகழ்ச்சிகளை சிறப்பாகக் கிருஷ்ணாவதாரத்தில் நிகழ்ந்த பால*

*லீலைகளையே அவள் உள்ளம் கனிந்து, பக்தி மீராப் போற்றிகிறாள் என திருப்பாவை பாடல் முழுவதும் பாவை சிறப்பை எடுத்துக் கூறுகிறது.*

***திருவெம்பாவை, திருப்பாவை ஓர் ஒப்பீடு:***

*மாணிக்கவாசகரால் பாடப்பட்டது திருவெம்பாவை. சூடிக்கொடுத்த சுடாக்கொடியாகிய ஆண்டாளால் பாடப்பட்டது. திருப்பாவை இவ்விரண்டு பாவைகளும் பிற பாவைகள் தோன்ற காரணமாய் அமைந்த சிறப்புடையது.*

*திருவெம்பாவை, திருப்பாவை இரண்டும் 'பாவாய்' என்று முடியும் பாசுரங்களைக் கொண்டது. திருவெம்பாவை இருபது பாடல்கள் உடையது, திருப்பாவை முப்பது பாடல்கள் உடையது. திருவெம்பாவை சிவனோடு இரண்டறக் கலந்த ஆண்தகையார் பாடியது, திருப்பாவை, திருமாலையன்றி அறியாத பெண்ணரசி பாடியது. திருவெம்பாவை, சிவன் புகழ்பாடுவதில் இணையற்ற நூலாகிய திருவாசகத்தின் ஒரு பகுதி, திருப்பாவை, திருமால் சீர் பரவுவதில் தலைசிறந்த நூலாகிய நாலாயிரத் திவ்யபிரபந்தத்தின் ஒரு பகுதி. திருவெம்பாவையைப் போலவே திருப்பாவை பாசுரங்களும் ஈற்றில்* ***'எம்பாவாய்'*** *என்றே முடிகின்றன. திருவெம்பாவையில் கடைசிப்பாட்டு போற்றி போட்டு திருப்பாவையில் இருப்பத்து நான்காவது பாடல் போற்றிப் பாடல். இப்படி புகழ்ந்துக் கொண்டே போகலாம். இவ்விருபாவைகளும் முறையே சிவனையும், திருமாலையும் ஊழி முதல்வன் என்று அழைக்கின்றன.*

***தைப்பாவை:***

*1963 -இல் கண்ணதாசன் தைத்திங்களையே பெண்ணாகப் பாவித்துப் பாடிய முப்பது பாடல்களைக் கொண்டது இந்நூல். மற்ற பாவைகள் வெண்டளையே முழுக்கப்பெற்று வரும். மற்ற பாவைகளில் வரும் 'ஏல்', 'ஓர்' என்ற பொருளற்ற அசைச்சொற்களை நீக்கி 'தைப்பாவாய்' என்றே முடிக்கின்றார்.*

***" காளை மணியோசை களத்துமணி நெல்லோசை***
***வாழை யிலையோசை வஞ்சியர் கை வளையோசை***
***தாழை மடலோசை தாயர் தயிர் மத்தோசை***
***கோழிக் குரலோசை குழவியர் வாய்த தேனோசை***
***ஆழி யலையோசை அத்தனையும் மங்கலமாய்"[7].***

*இப்பாடல் பண்டைய தைந்நீராடலை நினைத்து கண்ணதாசன் தைத் திங்களைப் பாடுகின்றார் எனக் கருதலாம்.*

***இசுலாமிய நோன்புப் பாவை:***

*இசுலாமியத்தின் கடமை நோன்பு ரமலான் மாதத்தில் வந்து விட்டது. அண்டை அயலாரெல்லாம்* ***'ஸஹர்'*** *செய்ய எழுந்து விட்டனர். இன்னுமா உன் துயில் கலையவில்லை என்று தன் தோழியை எழுப்புவதாய் நோன்புப்பாவை என்ற தலைப்பில் 'பிறை' இதழில் பதினைந்து பாடல்களை மட்டும் கவி.கா.மு.ஷெரீப் அவர்கள் இயற்றியுள்ளார்.*

***" கடமை ஐந்தாகும் கன்னியா காளதிலே***
***இடமை ரமலானில் இசைந்தே நோன்பிருத்தல்***
***மடமை இதைமறந்து மயங்கித் துயில் கொளல்***
***உடனெழுவீர் சகர்வேளை உற்றதுகாண் எம்பாவாய்"[8]***

*மேலே குறிப்;பிட்ட பாடல் இசுலாமியத்தின் கருத்துக்களைப் போதிப்பதாய் அமைந்துள்ளன.*

***திருவருட்பாவை:***

*காரை இறையடியான் அவர்கள் இந்நூல் வெளிவந்த முப்பது பாடல்களை இயற்றியுள்ளார். இத்திருவருட்பாவையில் மார்கழி நோன்பு, ரமலான் நோன்பாகக் காட்சியளிக்கிறது. இறைநம்பிக்கை, தொழுகை, பேரன்பு, பொருளறம், அருள்வெளிப்பயணம் என்ற ஆறு பகுதிகளாய் அமைந்துள்ளது. இந்நூலில் பாவைப் பாட்டின் இலக்கணமும் மரபும் பின்பற்றப்பட்டுள்ளது.*

***" கண்ணில் கயலாடக்***
***கார்க் கூந்தல் காற்றாடத்***
***தண்ணரும் பூம்பாதத்***
***தாளநடைப் பூவையீர் ;***
***எண்ணம் எழுப்பீரோ?***
***எம்முரையுங் கேளீரோ"[9]***

*போன்ற அழகிய பாவைப்பாடல்கள் முப்பதும் சிறப்பாக அமைந்துள்ளன. இசுலாமியத்துப் பாவைப்பாடல் இல்லை என்ற குறையை இந்நூல் போக்கிவிட்டது எனலாம்.*

***திருவெம்பாவையின் சிறப்பு:***

*மாணிக்கவாசகர் இறைவனோடு கொண்ட உள்ளன்பின் காரணமாக திருவாசகத்தை மாணிக்கவாசகர் சொல்ல அழகிய சிற்றம்பலமுடையான் பொற்கரத்தால் எழுதப்பட்ட ஒரு அனுபவ நூல் என்றே கூறலாம். சிவபெருமானை அடையும் வழி அன்பினால் மட்டுமே அவனை அடைய முடியும். தகுதிபெற்ற உயிர்களும் தாமும்*

*விளையாட்டுப் போன்றப் போன்ற செயல்களாய் இறைவனின் திருவருளுக்கு இலக்காககின்றன.*

*அவர் காட்சிப்படும் நீராடவரும் மகளிர் பொய்கையைப் பார்க்கின்றனர். அவர்களுக்குப் பொய்கை சிவசக்தி வடிவமாகக் காட்சி நல்குகின்றது. ஒரு பக்கம் கருமை மிக்க குவளைமலர்கள் ; மற்றொருபுறம் செந்தாமரை மலர்கள் பூத்துக்குலுங்கியுள்ளன. இவை சிவசக்தியை நினைவூட்டுகின்றன. பார்வையாலும் மனதினாலும்; சிவபெருமான் பெறும் தீட்சை சாலப்பொருந்துகின்றன. தாமரை மலர் அப்பனாய் விளங்கும் பெருமானையும் குறிக்கின்றது. அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம் அன்றோ! என்ற பாடல் வரி ஒத்துள்ளன.*

*மாணிக்கவாசகர் தன்னையே மறந்து சிவபெருமான் மீது பேரன்பு கொள்வார். அதனால் அன்பின் மிகுதியால் கண்ணீர் ஆறாகப் பெறுகின்றது.அக்கண்ணீர் அன்பினை வெளிப்படுத்துகின்றது.*

***" அன்பிற்கும் உண்டோ அடைக்குந்தாழ் ஆர்வலர்***
***புன்கணீர் பூசல் தரும். "[10]***

***(குறள் -71)***

*மேலே குறிப்பிட்ட குறளில் பிற தெய்வங்களைக் பணியாள் என்பதனை 'தான் பணியாள்' என்றார். இறைவன் மீது பித்து ஏறும் நிலைக்கு அன்பு கொண்டவர் இவரைத் தவிர 'பிறர் உளரோ?' என்ற அவரின் பக்தியை வெளிப்படுத்துகிறது.*

*அப்படி பாடி மகிழும் இளமகளிர் இறைவனிடம் அப்பெண்கள் வரம் வேண்டுகின்றனர்.*

1. *எம்மை உமக்கின்ற வேறு எவர்க்கும் எப்பணியும் செய்யக் கூடாது.*
2. *எம் கொங்கை நின் அன்பர் அல்லாதார் தோள்களோடு இணைதல் கூடாது.*
3. *எம் கண்கள் இரவிலும் பகலிலும் நின்னையே காண வேண்டும்.*

*இம்மூன்றும் எமக்குக் கிடைத்துவிடின் எம்போல் பெருமை கொண்டார் யாருமே இருக்க முடியாது. எனவே சூரியன் எங்கு உதித்தால் என்ன? என இளமகளிர் எண்ணி நகையாடினர்.*

*மாணிக்கவாசகரின் விடாமுயற்சி அவரின் குறிக்கோள் இறைவனை அடைய வேண்டும். அவரின் தனிமனித வெளிபாடு தான் திருவாசகம். அவை முழுவதும் கண்ணீர் பொய்கையில் பொலிந்த கமலங்கள் என்றேக் கூறலாம். திருவாசகத்தை அனைவரும் படித்து இறைவருளை மாணிக்கவாசகரின் வழியில் நாமும் பெறுவோமாக!.*

**அடிக்குறிப்பு**


1. திருவொம்பாவை, திருப்பள்ளியெழுச்சி – ஓர் ஆய்வு

   திரு.ச.சச்சிதானந்தம் பிள்ளை, பாரிநிலையம், 184, பிரகாசம் சாலை,

   சென்னை - 600108
2. மேலது, ப – 18, ஐங்குறு பா – 377.
3. மேலது, ப – 19, தெ.பொ.மீ. இலக்கியவரலாறு.
4. மேலது, ப – 23, ராய. சொக்கலிங்கனார் பாவைப்பாட்டு ப -11.
5. மேலது, ப – 23, தெ.பொ.மீ. சயாமில் திருவெம்பாவை, திருப்பாவை. ப -11.
6. திருவாசகம் மூலமும் - உரை

   பி.ரா.நடராசன் உமா பதிப்பகம், மண்ணடி, சென்னை – 600001.
7. மேலது, ப – 323, திருவொம்பாவை ப -155.
8. பாவையும் பள்ளியெழுச்சியும் வை.இரத்தினசபாபதி ப -1, பா-1
9. தைப்பாவை கண்ணதாசன் வானதி பதிப்பகம் -1963, பா -3.
10. மேலது, ப – 40, பிறை திங்களிதழ் அக் -1973.
11. காரை இறையான் திருவருட்பாவை ,பாத்திமா பதிப்பகம், காரைக்கால்.
12. திருவாசகம் மூலமும் - உரை ,

    பி.ரா.நடராசன் உமா பதிப்பகம், மண்ணடி, சென்னை – 600001.